# வளம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செய்திமடல்

காலாண்டுச் செய்திமடல்

அக்டேபர் 2005 மலர்-1 இதழ்-3

மேலும் தகவல்களுக்கு www.ciks.org என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.




## சர்வதேச இயற்கைவழி மாநாடு

“சர்வதேச இயற்கைவழி மாநாடு” ஆஸ்திரேலியாவில் உள்ள அடிலெய்ட் நகரத்தில் செப்டம்பர் மாதம் 20 ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரை நடைபெற்றது. இந்த மாநாட்டை இயற்கை விவசாய நிறுவனங்களின் சர்வதேச கூட்டமைப்பான ஐஃபோம் (IFOAM) நடத்தியது. இந்த மாநாட்டில் 72 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் சார்பில் கே. விஜயலட்சுமி மற்றும் எஸ். ஆறுமுகசாமி கலந்து கொண்டனர்.

இயற்கை வேளாண்மை விதிமுறைகளை திருத்தியமைக்க சர்வதேசக் குழு ஒன்றை ஐஃபோம் நிறுவியிருந்தது. இந்தக் குழுவின் ஆசிய உறுப்பினரான கே. விஜயலட்சுமி அவர்கள் இயற்கை வேளாண்மை விதிமுறைகளை திருத்தியமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். கடந்த மே மாதம் ஜெர்மனியில் நடைபெற்ற மாநாட்டில் இதன் இறுதிப் படிவம் தயாரிக்கப்பட்டது. இந்த இறுதிப்படிவத்தை ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஐஃபோம் உறுப்பினர்களின் பொதுச்சபை கூட்டத்தில் கே. விஜயலட்சுமி அவர்கள் விளக்கிக் கூறினார். உறுப்பினர்களுடன் நடந்த பல்வேறு ஆலோசனைகளுக்குப் பிறகு திருத்தியமைக்கப்பட்ட இயற்கை வேளாண்மை விதிமுறைகளுக்கு ஓட்டெடுப்பு நடத்தப்பட்டது. பெரும்பாலான உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற்று, இந்த விதிமுறைகள் ஐஃபோமால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.



சர்வதேச இயற்கைவழி மாநாட்டில் கே. விஜயலட்சுமி

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைக் கூட்டம்

மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை கேட்டுக்கொண்டதற்கு இணங்க இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் ஒரு கூட்டத்தை செப்டம்பர் 22ஆம் தேதியன்று நடத்தியது. இந்தக் கூட்டம் மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் அடிப்படை ஆதரவு பெற்றுவரும் / பெற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்காக நடத்தப்பட்டது. மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய பல திட்டங்களை தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உருவாக்கி உள்ளன. அவற்றில், பல இடங்களிலும் செயல்படுத்தக்கூடிய திட்டங்களைக் கண்டறிந்து, அவற்றைப் பற்றி விவாதிப்பதற்காக இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது. தமிழ்நாடு, பாண்டிச்சேரி மற்றும் கேரளாவிலிருந்து எட்டு தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். மேலும், இந்தக் கூட்டத்தில் புது தில்லியில் உள்ள தொழில்நுட்ப வளர்ச்சி மையத்திலிருந்து டாக்டர் ரகுநந்தன் மற்றும் டாக்டர் சுபோத் அவர்களும், மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் அறிவியல் மற்றும் சமூக பிரிவின் தலைவர் டாக்டர் வி. சி. கோயல் அவர்களும் கலந்து கொண்டனர்.





மேலும் தகவல்களுக்கு 98403 57487 எண்ணை தொடர்பு கொள்ளவும் அல்லது www.ciks.org/arogyam.htm என்ற இணையப் பக்கத்தைப் பார்க்கவும்.



# ஆய்வுத் திட்டங்கள் - ஒரு பார்வை

**விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இயற்கை வேளாண்மை திட்டம்**

ஃபோர்டு நிறுவனத்தின் உதவியுடன் எங்கள் மையம் செயல்படுத்தி வரும் இந்தத் திட்டம் ஒரு ஆண்டு நிறைவு பெற்றுள்ள நிலையில், அதன் அகமதிப்பீடுக் கூட்டம் ஜூலை 30 ஆம் தேதியன்று மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கூட்டத்தில் திட்டத்தின் முக்கிய அம்சங்களை காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் விளக்கிக் கூறினர். மூன்று மாவட்டங்களிலும் ஏறக்குறைய 90% விவசாயிகள் இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பாரம்பரிய ரகங்களை பயன்படுத்துகின்றனர். மேலும், அவர்கள் உற்பத்தி செய்த பொருட்களுக்கு நல்ல இலாபம் கிடைத்துள்ளது.

ஜூலை மற்றும் செப்டம்பர் மாதங்களில் 3 மாவட்ட பயனீட்டாளர்களுக்கும் இரண்டு பயிற்சியாளர் பயிலரங்குகள் நடத்தப்பட்டன. முதல் பயிலரங்கில் டாக்டர் கௌதமன் (ஆயுர்வேத மருத்துவர்) அவர்கள் விவசாயிகளுக்கு ஆயுர்வேத அடிப்படையில் மருந்துகளைத் தயாரிக்கும் முறைகள் குறித்து பயிற்சி அளித்தார். மற்றொரு பயிலரங்கில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த இயற்கை விவசாயிகள் தங்கள் அனுபவங்களைப் பயனீட்டாளர்களுடன் பகிர்ந்து கொண்டனர். இதில் புளியங்குடியைச் சேர்ந்த திரு. கோமதிநாயகம் அவர்களும், திரு. அந்தோணிசாமி அவர்களும், ஈரோட்டைச் சேர்ந்த திரு. சுந்தர்ராமன் அவர்களும், செங்கல்பட்டைச் சேர்ந்த திரு. முகுந்தன் அவர்களும் கலந்து கொண்டனர். இந்தப் பயிலரங்கில் வங்கி ஊழியர்கள் கலந்து கொண்டு வங்கிகள் மூலம் விவசாயிகள் பெறக்கூடிய உதவித் திட்டங்கள் குறித்து விளக்கினர்.

செப்டம்பர் 13ஆம் தேதியன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் இயற்கை வேளாண்மை விழா நடத்தப்பட்டது. இந்த விழாவில் மாவட்ட ஆட்சியாளர் திரு. சத்தியபிரதா சாஹூ, இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்த விழாவில் நபார்ட் வங்கியின் துணை மேலாளர் திரு. சங்கரநாராயணன் அவர்களும், துணை வேளாண் இயக்குனர் திரு. கோதண்டபாணி அவர்களும், தாசில்தார் அவர்களும் கலந்து கொண்டனர். இந்த விழாவில் இயற்கை விவசாய சங்கங்களுக்கு வேளாண் உபகரணங்களும், சிறப்பாக செயல்பட்டு வரும் சங்கங்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. இந்த மாவட்டங்களில் நிறுவப்பட்ட தாவரக்கரைசல் தயாரிப்பகம் மற்றும் விதை வங்கிகளின் திறப்பு விழா ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதங்களில் நடைபெற்றது.

**காய்கறிகளில் விருட்சாயுர்வேதா பரிசோதனை**

மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் "காய்கறிகளுக்கான விருட்சாயுர்வேதம்" என்ற திட்டத்தில் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகள் ஒன்றிணைக்கப்பட்டு, புதிய பரிசோதனைகளுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. பாதரக்குடி கிராமத்தில் அரை ஏக்கரில் அவரை, சுரை, கத்தரி மற்றும் வெண்டை பயிர் செய்யப்பட்டுள்ளது. பாரம்பரிய காய்கறி ரகங்களை சேகரிப்பது குறித்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டாக்டர் மணிவண்ணன் அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பான சில தொழில்நுட்ப தகவல்களை சேகரிப்பதற்காக சுபாஷிணி ஸ்ரீதர் மற்றும் பி. கிருத்திகா தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திற்குச் சென்றிருந்தனர்.

**காம்பாஸ் வளர்ச்சி திட்டம்**

- ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் ஆகஸ்டு மாதம் 2 ஆம் தேதியிலிருந்து 8 ஆம் தேதி வரை இலங்கை சென்றிருந்தார். அங்கு அவர் காம்பாஸ் திட்டத்தின் இலங்கை ஒருங்கிணைப்பாளர் திரு. கே.ஏ.ஜே. கஹாண்டவா அவர்களைச் சந்தித்து காம்பாஸ் திட்டம் குறித்துப் பேசினார். மேலும், அவர் நாவ்லா ரிசோசர்ஸ் டெவெலப்மெண்ட் ஃபண்ட் (Nawla Resource Development Fund) என்ற இலங்கை காம்பாஸ் உறுப்பினரின் களப்பணிகளை பார்வையிட்டார். கண்டியில் நடைபெற்ற அனைத்து இலங்கை உறுப்பினர்களின் கூட்டத்திலும் கலந்துகொண்டார். இலங்கையில் உள்ள சிஈஆர்டி (CERD) என்ற நிறுவனம் 'பாரம்பரிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்' என்ற தலைப்பில் ஒரு கூட்டத்தை 5 ஆம் தேதி முதல் 7 ஆம் தேதி வரை நடத்தியது. ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் இதிலும் கலந்து கொண்டு உரையாற்றினார்.

- அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் துறையின் பேராசிரியர் டாக்டர் அறிவுடை நம்பி அவர்கள் சீர்காழியில் உள்ள பூச்சி வளர்ப்பு ஆய்வகத்திற்கு ஜூலை 13 ஆம் தேதியன்று வந்திருந்தார். ஆய்வகத்தில் நியூக்ளியர் பாலி ஹெட்ரோசிஸ் நச்சுயிரியால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்ப்பதற்கான ஆலோசனைகளை அவர் வழங்கினார். ஆய்வகத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளை குறித்த அகமதிப்பீடு மேற்கொள்வதற்காக ஆ.வே. பாலசுப்பிரமணியன் மற்றும் ஆர். ஸ்ரீதேவி செப்டம்பர் 26 மற்றும் 27 ஆம் தேதிகளில் சீர்காழி சென்றிருந்தனர்.

- நரப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த மூன்று விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மைக்கு முழுமையாக மாறுவதற்கு காம்பாஸ் திட்டத்தின் மூலம் உதவி வழங்கப்படுகிறது. இந்த விவசாயிகளுக்கு ஜூலை 21 ஆம் தேதியன்று இயற்கை வேளாண்மை குறித்து பயிற்சியளிக்கப்பட்டது. இந்த விவசாயிகள் 27ஆம் தேதியன்று ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் உள்ள திரு. சுந்தர்ராமன் அவர்களின் இயற்கை வேளாண் பண்ணைக்கு அழைத்து செல்லப்பட்டனர். அவர்களுடன் களப்பணி ஊழியர்கள் ஆர். ஐயாசாமி மற்றும் வி. சுரேஷ் சென்றிருந்தனர்.

## புதிய திட்டங்கள்

**உணவு மற்றும் வேளாண் நிறுவனத்தின் திட்டம்**

புது தில்லியில் உள்ள உணவு மற்றும் வேளாண் நிறுவனமும் (FAO), காசியாபாத்திலுள்ள தேசிய இயற்கை வேளாண்மை மையமும் (NCOF) இணைந்து இரண்டு நாள் பயிலரங்கை ஜூலை 18 மற்றும் 19 ஆம் தேதிகளில் நடத்தியது. இந்திய அரசாங்கத்துடன் உணவு மற்றும் வேளாண் நிறுவனம் இணைந்து மேற்கொள்ளும் திட்டம் குறித்து முடிவு செய்வதற்காக இந்தப் பயிலரங்கு நடத்தப்பட்டது. இந்தப் பயிலரங்கில் 5 மாநிலங்களைச் சேர்ந்த தன்னார்வ தொண்டு பிரதிநிதிகளும், உணவு-வேளாண் நிறுவனம் மற்றும் தேசிய இயற்கை வேளாண்மை மையத்தின் ஊழியர்களும் கலந்து கொண்டனர். இந்தப் பயிலரங்கில் ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்களும், கே. விஜயலட்சுமி அவர்களும் கலந்து கொண்டனர். அவர்கள் 'தமிழ்நாட்டில் தற்போதைய இயற்கை வேளாண்மை நிலைமை' குறித்தும், 'இயற்கை வேளாண்மையை விரிவுபடுத்துவதில் ஏற்படும் பிரச்சனைகள்' குறித்து: உரையாற்றினர்.

தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்பட்டு வரும் நான்கு பயிர்களின் இயற்கை சாகுபடி முறைகளை தொகுக்கும் பணி இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்திடம் வழங்கப்பட்டுள்ளது. நெல், நிலக்கடலை, வெண்டை மற்றும் தக்காளி பயிர்களின் இயற்கை சாகுபடி முறைகளை தொகுக்கும் பணியை மையம் ஆரம்பித்துள்ளது.

**தாவரக்கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டம்**

மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன் தாவரக்கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டத்தை எங்கள் மையம் துவக்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஆயுர்வேத அடிப்படையில் தாவரக்கரைசல்களை தயாரிப்பது குறித்தும், அவற்றின் சேமிப்புக் காலத்தை அதிகரிப்பது குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். மேலும், இந்த தயாரிப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும். ஆய்வுகளை மேற்கொள்வதற்காக பூச்சி வளர்ப்பு ஆய்வகத்தில் படைப்புழுக்கள் மற்றும் அசுவுணிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக டாக்டர் அறிவுடை நம்பி அவர்கள் பயிற்சியளித்து வருகிறார்.

தாவரக்கரைசல்களைப் பயன்படுத்தி பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ள திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மேலும், பூச்சிப் பெட்டிகளும், நோய் மாதிரி அட்டைகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

# நிகழ்வுகள் - ஒரு அலசல்

### உணவுக்கு உத்திரவாதம் அளிக்கும் இயற்கை வேளாண்மை

புது தில்லியில் உள்ள கபார்ட் நிறுவனத்தின் உதவியுடன் 'உணவுக்கு உத்திரவாதம் அளிக்கும் இயற்கை வேளாண்மை திட்டத்தை' காஞ்சிபுரம் மாவட்டத்தில் பத்து கிராமங்களில் செயல்படுத்தி வருகிறோம். அதன் ஒரு பகுதியாக சேந்தங்குளம், சித்தாளமங்களம், எடையூர், கோரப்பட்டு, திருவானைக்கோயில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இயற்கை விவசாய சங்க உறுப்பினர்களுக்கு இயற்கை வேளாண்மைப் பயிலரங்குகள் நடத்தப்பட்டன. அதில், விவசாயிகளுக்கு இயற்கைவழி நெல் மற்றும் காய்கறி சாகுபடி குறித்தும், மண்வள மேம்பாடு குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், அவர்களுக்கு தேவையான நெல் மற்றும் காய்கறி விதைகளும், வேப்பம் பிண்ணாக்கு, உயிர் உரம் போன்ற இடுபொருட்களும் வழங்கப்பட்டன. ஏறக்குறைய 40% பயனீட்டாளர்கள் விதைப்பு செய்துள்ளனர். மேலும், இந்த கிராமங்களில் மாதாந்திர சங்கக் கூட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

### சுனாமி நிவாரணப் பணிகள்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமி பாதித்த நிலங்களை சீரமைப்பது தொடர்பாக பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறோம். அதன் ஒரு பகுதியாக நிலக்கடலை மற்றும் பாரம்பரிய நெல் ரகங்களில் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூழையார் கிராமத்தில் பரிசோதனை அடிப்படையில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் 'குந்தாலி' என்னும் பாரம்பரிய நெல் ரகம் நடவு செய்யப்பட்டுள்ளது. இந்த கிராமத்தில் உறை கிணறு ஒன்றும் வெற்றிகரமாக அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு விவசாயிகளுக்கு ஆழ்துளை கிணறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும். 25 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான காய்கறி விதைகள் வழங்கப்பட்டுள்ளன. புது தில்லியில் உள்ள 'நவதானியா' என்னும் நிறுவனம் விவசாய நிலங்களை சீரமைப்பது குறித்து ஒரு கூட்டத்தை நடத்தியது. இதில் சீர்காழி களப்பணி ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

### ஆய்வுப்பண்ணையில் நடந்த பணிகள்

சுக்கன்கொல்லையில் உள்ள பண்ணையில் இயற்கை விவசாயம் தொடர்பான பல்வேறு ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அங்கு முதல் முறையாக அசோலா வளர்ப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது. பல்வகைமை பாதுகாப்பு வயலில் பனிரெண்டு பாரம்பரிய நெல் ரகங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. மேலும், 28 பாரம்பரிய நெல் ரகங்களுக்கு நாற்று விடப்பட்டுள்ளது. காய்கறித் தோட்டம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அதில் நான்கு காய்கறி வகைகளைச் சேர்த்து பத்து காய்கறி ரகங்கள் விதைப்பு செய்யப்பட்டுள்ளன.

### நெல்-விதை முதல் அறுவடை வரை

ஹைதராபாத்திலுள்ள ஹீவாஸ் நிறுவனம் ஜுலை 4 மற்றும் 5 ஆம் தேதிகளில் இரண்டு நாள் பயிலரங்கை நடத்தியது. நெல் சாகுபடியில் விதை முதல் அறுவடை வரை மேற்கொள்ளப்படும் தொழில்நுட்பங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக இந்தப் பயிலரங்கு நடத்தப்பட்டது. இந்தப் பயிலரங்கில் ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். மேலும், அவர் தேசிய ஊட்டச்சத்து மையத்திற்குச் சென்று அங்குள்ள விஞ்ஞானிகளைச் சந்தித்துப் பேசினார்.

### தொழில்முனைவோருக்கான பயிலரங்கு

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இளநிலை வேளாண் மாணவர்களுக்காக 'தொழில் முனைவோருக்கானப் பயிலரங்கு' ஒன்று நடத்தப்பட்டது. இந்தப் பயிலரங்கு 10 நாட்களுக்கு நடைபெற்றது. இதில் சுபாஷிணி ஸ்ரீதர் மற்றும் ஆர். மகேஸ்வரி கலந்து கொண்டு தாவரக்கரைசல்கள் தயாரிப்பு குறித்தும், அதன் மூலம் வருவாய் ஈட்டுவது குறித்தும் பயிற்சியளித்தனர்.

### வேளாண்மை கண்காட்சியில் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம்

ஜுலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் மதுரையிலும், திருவண்ணாமலை மாவட்டத்திலும் வேளாண் கண்காட்சிகள் நடைபெற்றன. இந்த கண்காட்சிகளில் எங்கள் மைய ஊழியர்கள் கலந்து கொண்டு, மையத்தினால் வெளியிடப்பட்ட புத்தகங்கள் மற்றும் இதர பொருட்களை கண்காட்சியில் வைத்து விற்பனை செய்தனர்.

### விதைகள் குறித்து விவாதம்

பெங்களூரில் உள்ள க்ரீன் ஃபௌண்டேஷன் (Green Foundation), ஏட்ரீ (ATREE) மற்றும் பெய்ஃப் (BAIF) நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து ஜுலை 23ஆம் தேதியன்று பெங்களூரில் உள்ள தேசிய சட்டக் கல்லூரியில் வட்ட மேஜை மாநாடு ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தன. 'விதைகள் 2004' என்ற சட்டத்தின் மாதிரிப் படிவம் குறித்து விவாதிப்பதற்காக நடத்தப்பட்ட இந்தக் கூட்டத்தில் கே. விஜயலட்சுமி கலந்து கொண்டார். இந்த சட்டத்தை விவசாயிகளுக்கு பயனுள்ளதாக அமைக்க பல்வேறு ஆலோசனைகள் பெறப்பட்டன.

### நீர்வடிப் பகுதிகளை விரிவுபடுத்தும் திட்டம்

நபார்ட் நிறுவனம் நீர்வடிப் பகுதி திட்டத்தை மேலும் சில மாவட்டங்களுக்கு விரிவுப் படுத்துகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்திலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்காக நபார்ட் நிறுவனம் சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைத் தேர்வு செய்துள்ளது. இந்த நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளை ஒரு அறிமுகத்திற்காக வேலூர் மாவட்டத்தில் நாற்றம்பள்ளி என்ற இடத்தில் உள்ள நீர்வடிப் பகுதிக்கு ஜுலை 28 மற்றும் 29 ஆம் தேதிகளில் அழைத்துச் சென்றது. எங்கள் மையத்தின் சார்பில் எஸ். ஆறுமுகசாமி மற்றும் பி. காளிதாஸ் இதில் கலந்து கொண்டனர்.

### ஆரோக்கியம் திட்டம்

ஆரோக்கியம் திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பாக எங்கள் விற்பனை பிரதிநிதி எஸ். சிவக்குமார் பாண்டிச்சேரி மற்றும் கோயம்புத்தூர் சென்றிருந்தார். அவர் அங்குள்ள பல்பொருள் அங்காடிகளுக்குச் சென்று அதன் உரிமையாளர்களிடம் உரையாடினார். மேலும் அவர் ஏவிபி (AVP) நிறுவனத்திற்கும் சென்றிருந்தார். அவர் சென்னையில் அஹூம்காரா நிறுவனத்தினால் நடத்தப்பட்ட இயற்கை விழாவிலும் கலந்து கொண்டார். ஆகஸ்டு 26 ஆம் தேதியன்று (கிருஷ்ண ஜெயந்தி) ஒடிசி கடையின் பல்வேறு கிளைகளிலும் இயற்கைமுறையில் சாகுபடி செய்யப்பட்ட, பாரம்பரிய நெல் ரகங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட அவல் 2000க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. மக்களிடமிருந்து இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

### பயணங்கள் மற்றும் பயிற்சிகள்

- அண்மையில் தாய்லாந்தில் நடைபெற்ற பயிலரங்கில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு சுபாஷிணி ஸ்ரீதர் களப்பணி ஊழியர்களுக்கு வயல்வழி விவசாயக் கல்வி குறித்து பயிற்சியளித்தார்.

- ஆகஸ்டு 29ஆம் தேதியன்று காப்பீட்டுத் துறையைச் சேர்ந்த திருமதி. லோகேஸ்வரி அவர்கள் செங்கல்பட்டு களப்பணி ஊழியர்களுக்கு வேளாண்மை தொடர்பான காப்பீட்டுத் திட்டங்கள் குறித்து விளக்கிக் கூறினார்.

- செப்டம்பர் 5 மற்றும் 6 ஆம் தேதியன்று ஏ.பி. ஞானசேகர் மற்றும் எஸ். ஆறுமுகசாமி கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தா கேந்திராவின் (Vivekananda Kendra) தொழில்நுட்ப தகவல் மையத்திற்குச் சென்றிருந்தனர். மேலும் அவர்கள் ஆத்மநிலையம் என்ற இடத்தில் அமைந்துள்ள மூலிகைப் பண்ணைக்கும் சென்றிருந்தனர்.

CIKS 1995 - 2005
TENTH ANNIVERSARY

உங்கள் கருத்துகள் மற்றும் விமர்சனங்களை **info@ciks.org** என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்.

## விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இயற்கை வேளாண்மைத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- இரண்டு பட்டங்களாக இயற்கை விவசாயம் செய்து வரும் விவசாயிகள் தங்கள் நிலத்தில் நல்ல மாறுதல்களைக் கண்டுள்ளனர். இதனால் விவசாயிகளின் ஊக்கம் அதிகரித்துள்ளது.
- திட்டத்தின் உதவி இல்லாமலேயே பல விவசாயிகள் மேலும் அதிக நிலப்பரப்பில் இயற்கை விவசாயம் செய்ய முன்வந்துள்ளனர்.
- இயற்கை விவசாயம் செய்வதன் மூலம் சாகுபடி செலவு 20 - 30% வரை குறைந்துள்ளது. மேலும் பூச்சிக் கட்டுப்பாட்டிற்கு ஆகும் செலவு 60% வரை குறைந்துள்ளது.
- எல்லா விவசாயிகளும் வீட்டுத் தோட்டம் அமைப்பது குறித்து அறிந்துள்ளனர். மேலும், அவர்களுக்குத் தேவையான காய்கறிகளை வீட்டுத்தோட்டத்தில் பயிர் செய்து வருகின்றனர். இதன் மூலம் விவசாயிகளுக்கு சத்து மிகுந்த காய்கறிகள் கிடைக்கிறது. பெண் விவசாயிகள் காய்கறிகளை சாகுபடி செய்வதன் மூலம் மாதந்தோறும் 300 ரூபாயிலிருந்து 350 ரூபாய் வரை வருமானம் பெறுகின்றனர். காய்கறி விதைகளை விற்பனை செய்தும் வருமானம் ஈட்டுகின்றனர்.
- பயனீட்டாளர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை மாதந்தோறும் சேமித்து வருகின்றனர். இதன் மூலம் அதிக வட்டிக்கு வெளியிலிருந்து கடன் பெறும் நிலை குறைந்துள்ளது. மேலும், இந்த சேமிப்பின் காரணமாக பல வங்கிகளும் விவசாயம் சம்பந்தமான பணிகளுக்கு கடனுதவி வழங்க முன்வந்துள்ளனர்.
- இந்தத் திட்டத்தின் மூலம் அளிக்கப்பட்ட பயிற்சிகளின் விளைவாக விவசாயிகள் இயற்கை விவசாய தொழில்நுட்பங்களை நன்றாக அறிந்துள்ளனர்.
- இந்த கிராமங்களைச் சேர்ந்த பயனீட்டாளர்கள் மேலும் பல விவசாயிகளுக்கு தாவரக் கரைசல் தயாரிப்பு மற்றும் உரம் தயாரிப்பு குறித்து பயிற்சியளித்து வருகின்றனர்.

## வருகையாளர் பதிவேடு

- ஜூலை 8 ஆம் தேதியன்று, புது தில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைகழகத்தின் சமூகவியல் துறையைச் சேர்ந்த டாக்டர் சுஜாதா அவர்கள் வந்திருந்தார்.
- ஜூலை 8 ஆம் தேதியன்று, கிராம மூலிகை கம்பெனியைச் சேர்ந்த டாக்டர் ஜி. ராஜூ அவர்கள் வந்திருந்தார். அவர்கள் கம்பெனியில் தயாரிக்கப்படும் மருந்துகள் குறித்து எடுத்துக் கூறினார்.
- ஜூலை 26 ஆம் தேதியன்று சென்னையிலுள்ள கோலம் (Kolam) நிறுவனத்திலிருந்து திரு. ரஞ்சித் ஹென்றி அவர்களும், டோக்கியோவில் உள்ள பீப்பிள் ட்ரீ (People Tree) நிறுவனத்திலிருந்து மலாயா இலிட்டோ அவர்களும் வந்திருந்தனர்.
- ஆகஸ்டு 5 ஆம் தேதியன்று மேற்கு வங்காளத்தில் உள்ள விவேகானந்தா உயிரியல் தொழில்நுட்ப மையத்திலிருந்து டாக்டர் ராமலக்ஷ்மி தத்தா அவர்களும், சென்னையிலுள்ள எம்.எஸ்.எஸ்.ஆர்.எப் (MSSRF) நிறுவனத்திலிருந்து திருமதி. தீபா வர்மா அவர்களும், சுக்கன்கொள்ளை ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தனர்.
- ஆகஸ்ட் 10 ஆம் தேதியன்று சமன்வயா நிறுவனத்தில் இருந்து காம்பாஸ் திட்டம் தொடர்பான ஒரு ஆய்விற்காக திரு. ஓ.பி. ராமசுப்பிரமணியன் அவர்கள் வந்திருந்தார்.
- ஆகஸ்ட் 17 ஆம் தேதியன்று பாண்டிச்சேரி அறிவியல் மையத்திலிருந்து 6 ஆராய்ச்சியாளர்கள் மற்றும் 14 விவசாயிகள் அடங்கிய குழு ஒன்று சீர்காழி தாவரக்கரைசல் தயாரிப்பகத்திற்கு வந்திருந்தது.
- ஆகஸ்ட் 19 ஆம் தேதியன்று இயற்கை விவசாய மையத்தில் இருந்து திரு. கிரிஃபே அவர்கள் வந்திருந்தார்.
- செப்டம்பர் 3 ஆம் தேதியன்று காந்திகிராம் பல்கலைக்கழகத்தின் வேளான் மற்றும் கால்நடை துறையின் தலைமை பேராசிரியர் டிடி. ரங்கநாதன் அவர்கள் வந்திருந்தார்.
- செப்டம்பர் 19 ஆம் தேதியன்று மஹாராஷ்டிரா இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பின் தலைவர் திரு. விக்ரம் போகே அவர்களும், பூனேயில் உள்ள நோமின் அக்ரோ பயோ லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ஆர்ஷித் வேலே அவர்களும் வந்திருந்தனர்..
- செப்டம்பர் 25 ஆம் தேதியன்று மலேசிஷியாவிலிருந்து 36 விவசாயிகள் அடங்கிய குழு ஒன்று ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தது.
- செப்டம்பர் 28 ஆம் தேதியன்று ஸ்ரீ அரபிந்தோ மையத்திலிருந்து 5 நபர்கள் ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தனர்.

ஆசிரியர் குழு : டாக்டர் கே. விஜயலட்சுமி & து.து. நிர்மலா தேவி

வடிவமைப்பு : ரா. ஆனந்த்

நூல்-அஞ்சல்

பெறுநர்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம்
நடைமுறை வாழ்க்கைக்கு மரபு அறிவியல்

30, காந்திமண்டபம் சாலை, கோட்டூர்புரம், சென்னை - 600 085.
தொலைபேசி : 91-044-24471087, 24475862 தொலைநகல் : 91-044-24471114
மின்னஞ்சல் : ciks@vsnl.com இணையத்தளம் : www.ciks.org